சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.107/2021

20.02.2026

வா.சா.1 திரு.அசோகன், த/பெ. பக்கிரிசாமி

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மீண்டும் விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சலாமத்பேகம் என்பவரிடமிருந்த வாங்கிய சொத்துக்கள் சம்பந்தமாக திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.18/2016 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல் அந்த வழக்கின் பிராது என்றாலும் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையின் நகல் அ.வ.எண்.18/2016 ல் 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைஎன்றால் சரிதான், அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆகும். நான் தாக்கல் செய்த வழக்கில் என் தகப்பனார் 3 ஆம் பிரதிவாதி என்றால் நான் அவரை சேர்க்கவில்லை. அன்பழகன், முருகேசனை சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேன். எனது தகப்பனாரை சேர்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.18/2016 ன் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை எனது தகப்பனாரான 3 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்ததா என்றால் அவர் தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் என் தகப்பனார் கொடுத்த மனுவின் பேரில் அவர் 3 ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார் என்றால் சரிதான். சாட்சி அவர் தரப்பில் கொடுக்கப்பட்டது அவர் கொடுத்ததா என்று தெரியாது என பதில் அளிக்கிறார். எனது தகப்பனார் பெயரில் குத்தகை பதிவேடு இருந்தது என்றால் இல்லை. எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்து சம்பந்தமாக செட்டில்மெண்ட் எழுதியதை உண்மை என ஒப்புக்கொண்டும் அ.வ.எண்.18/2016 ல் கண்ட சொத்துக்களை குத்தகைக்கு இருந்ததை ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் மனுவில் அப்படிதான் இருந்தது, ஆனால் என் தகப்பனார் என்னிடம் அவர் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னார். என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அ.வ.எண்.18/2016 ல் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5,

பி.வா.சா.ஆ.6 ஆகும். எனது தகப்பனார் தாக்கல் செய்த மனுவை எதிர்வழக்குரையும் ஒப்புக்கொண்டால் எனக்கு விரோதமாக இருக்கும் என்ற காரணத்தினால் தற்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஒப்புக்கொண்டதால்தான் நான் வழக்கை மேல்நடத்தவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசியதன் அடிப்படையில் தான் ஒப்புக்கொண்டேன். நான் சொல்வது போல் பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.